# Livelihood Opportunities

**By**

**Vivekananda Kendra - Nardep**

மீனவர்களுக்கான மாற்று வாழ்வாதார தேடலில் எங்களுக்கு கிடைத்த வாய்ப்பே வீணான பூக்களில் இருந்து தயாரிக்கக் கூடிய பூ அகர்பத்திகள். இதை கடந்த அக்டோபர் மாதம் 14ந் தேதியன்று நடைபெற்ற மனித சங்கிலி நிகழ்வில் இந்த திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

நமது காந்திகிராமத்தில் இதை உற்பத்தி செய்வதால் அவர்களிடம் பயிற்சிக்கு கேட்டோம் அதற்கு அவர்கள் மிகுந்த சந்தோசத்துடன் இசைந்தார்கள்.



**பசுமை குழு உறுப்பினர்கள் பயிற்சியின் போது**

நமது பசுமை குழுக்களில் இருந்து இதில் ஆர்வம் காட்டியவர்கள் ஐந்து பேரை கண்டறிந்து அவர்களை கடந்த நவம்பர் மாதம் 21 மற்றும் 22ந் தேதிகளில் காந்திகிராமத்தில் பயிற்சி பெற்றார்கள்.

மிகுந்த உற்சாகத்துடன் இதனை கற்றார்கள். அதே உற்சாகத்துடன் அவர்கள் கூறிய மூல பொருட்கள் மற்றும் செய்முறைகளை வரிசைப் படுத்தி வைத்துள்ளோம். இதனை இதே போன்ற ஆர்வத்துடன் உள்ள பசுமை குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்து இதனை மிக சிறப்பாக மேம்படுத்தி கொண்டு செல்ல உள்ளோம்.

## வீட்டுத் தோட்டம் அமைத்தல்

வீட்டுத் தோட்டம் அமைத்தல் சம்பந்தமான பயிற்சி எங்கள் பசுமை இராமேஸ்வரம் தலைமை அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. நவம்பர் 18 மற்றும் 19 ஆம் தேதியன்று ஆரம்பிக்கப்பட்டது. ஒரு பயிற்சி இரண்டு மணி நேரம் மட்டுமே மொத்தம் ஒரு பயிற்சிக்கு 30 பேர் கலந்து கொண்டார்கள். காலை மாலை சேர்த்து 60 பேர் கலந்து கொண்டார்கள். அந்த இரு தினங்களில் மட்டும் மொத்தம் 120 பேர் பயன் பெற்றார்கள்.



பயிற்சியின்போது...

திரு.இராஜாமணி, விவேகானந்தா கேந்திரா பணியாளர் இதில் பயிற்சி அளித்தார்கள்.

அருமையாக இயற்கை உரங்கள் தயாரித்தல் மற்றும் விதைத்தல், ஆரம்ப நிலை பராமரிப்பு போன்ற அனைத்து விஷயங்களையும் விளக்கினார்கள்.

பயிற்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் தோட்டக்கலை இணை இயக்குநர் திரு. இராகேஷ் அவர்கள் துவக்க விழாவின் போது கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

